[3rd September 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Non-gazetted Government officers who are in receipt of pay up to Rs. 150 per mensem are in receipt of House Rent Allowance when stationed at any place other than (i) villages and (ii) major and minor panchayats which are not headquarters of either a taluk or Revenue division. There is no proposal to further extend the House Rent Allowance.

(*b*) Madras House Allowance is applicable to Government servants in the city (on a pay exceeding Rs. 150 per mensem, who are not eligible to the benefit of House Rent Allowance Scheme) subject to the posts satisfying certain conditions, e.g., common scales of pay in the city and mufassal and or liability to transfer to mufassal, etc. As the name of the scheme implies, it is intended to compensate Government servants for the comparatively high cost on account of house rent in the Madras City and there is, therefore, no question of extending the scheme to Government servants in other stations.

* 25-C *Q*.—SRI A. GOVINDASAMY : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

கெஜட் பதவில்லாத உத்தியோகஸ்தர்களுக்கு உயர்த்திய பஞ்சப்படி ரூ. 12-ல் மத்திய அரசாங்கத்திடமிருந்து சென்னை அரசாங்கம் பெறும் உதவித் தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government of India have sanctioned grants as follows :—

	RS.
1957–1958	143 lakhs.
First quarter of 1958–59	30 lakhs.

These amounts are provisional and subject to readjustment in the light of detailed calculations now being made.

* 25-D *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

N.G.O.-க்கள் சம்பளம் உயர்வு விஷயம் எந்த நிலைமையில் உள்ளது ? அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுப்பதற்கான உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government are awaiting the report of the newly-constituted Central Pay Commission.

SRI S. M. ANNAMALAI : பக்கத்திலுள்ள ஆந்திர மாநிலத்தில் சம்பளக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகக் கேள்விப்பட்டோம் சென்னை மாநிலத்திலும் சம்பளக் கமிஷனை நியமித்து, பணம் இல்லை என்று எப்போது பார்த்தாலும் பாடுவதை விட்டுவிட்டு, கூடிய சீக்கிரம் கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களின் சம்பளக் குறைகளைத் தீர்க்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆந்திரப் பிரதேசத்தில் கமிஷன் நியமிக்கவில்லை. கமிட்டிதான் நியமித்திருக்கிறார்கள். அது போன்று கமிட்டியை நியமித்துவிட்டு ஒரு வேலையும் செய்யாமல் இருக்கலாம் என்றால் அவ்வாறு இருக்க முடியும். பணத்தைப்பற்றி குறிப்பிடப் பட்டது. பணத்தைப் பொறுத்த வரையில், இருக்கும் பணத்தைத்தான் அரசாங்கம் கொடுக்க முடியுமே தவிர, இருக்கும் அளவிற்கு மேல் அரசாங்கத்தால் பணம் கொடுக்க முடியாது.

3rd September 1958]

SRI M. KALYANASUNDARAM : On a point of order, Sir. May I know whether it is proper for the Hon. Minister to make an insinuation against another State Government saying that they have constituted a committee and not doing any work ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆந்திர அரசாங்கம் வேலை ஒன்றும் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. அந்த அரசாங்கம் பணம் ஒன்றும் பட்டுவாடா செய்யவில்லை என்றுதான் சொன்னேன். (சிரிப்பு)

SRI N. K. PALANISAMI : என்.ஜீ.ஓ-க்கள், அவர்களது உத்தேச அடையாள வேலை நிறுத்த தேதிக்கு முன்பு கனம் முதல் அமைச்சரையும் கனம் நிதி அமைச்சரையும் சந்தித்தபோது, அந்த அமைச்சர்கள் "உங்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்பதை கவனிக்கிறோம், இது விஷயமாக மத்திய சர்க்காருக்கு எழுதுகிறோம்" என்று உத்தரவாதம் கொடுத்தார்களா ? அப்படியானால், அந்த உத்தரவாதம் இதுவரையில் எவ்வளவு தூரம் நிறைவேறியிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படி எந்த விதமான உத்தரவாதமும் கொடுக்கவில்லை. கனம் அங்கத்தினருக்கு இந்தச் செய்தி எங்கிருந்து கிடைத்ததோ, தெரியவில்லை.

SRI M. KALYANASUNDARAM : இடைக்கால நிவாரணம் கொடுக்கப்பட வேண்டிய அவசியத்தைப் பற்றியும், இரண்டாவது சம்பளக் கமிஷனின் சிபாரிசுகள் வெளியான பிறகு அந்த சிபாரிசுகளின் அடிப்படையில் நமது ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தை உயர்த்துவது பற்றியும், அபிவிருத்திக் கவுன்சில் முன்பு கொடுக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் மீது என்ன திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ? இரண்டாவது சம்பளக் கமிஷனின் சிபாரிசுகள் வந்த பிறகு அந்த சிபாரிசுகள் அப்படியே அமல் நடத்தப்படுமா, அல்லது அவைகளைப் பரிசீலிக்க ஏதாவது கமிட்டி நியமிக்கப்பட்டு அந்தக் கமிட்டியின் ஆலோசனைகளின்படி அந்த சிபாரிசுகளை அமல் நடத்தும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மத்திய சம்பளக் கமிஷனின் ஆலோசனைகள் வந்த பிறகு, நாம் எந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி ஆலோசனை செய்யப்படும்.

SRI T. VELUCHAMI : கிராமங்களில் வேலை பார்க்கும் 150 ரூபாய்க்குக் குறைவான சம்பளக்காரர்களுக்கு வீட்டு வாடகைப்படி எப்போது, எவ்வளவு கொடுக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to have notice Sir.

SRI V. K. KOTHANDARAMAN : நமது ராஜ்யத்தைவிட சிறிய ராஜ்யமாக இருக்கும் கேரள ராஜ்யத்தில் என்.ஜி.ஓ-க்களுக்கு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது ராஜ்யத்தில், என்.ஜீ.ஓ-க்கள் கேட்கும் அடிப்படையில் அவ்வளவு பெரிய அளவிற்கு அவர்களுக்கு இந்த சர்க்காரால் சம்பள உயர்வு கொடுக்க முடியவில்லை என்றாலும், கேரள ராஜ்யத்தில் கொடுத்துள்ளது போன்றுவது அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க இந்த சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் பிரச்னையில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் நமக்கு உள்ள நிதி வசதி ஆகும். நம்மிடமுள்ள நிதி வசதிக்குத் தகுந்த அளவில் திட்டமும் போட்டு, அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் போட்டிருக்கும் திட்டத்தை நாம் குறைத்துக்கொள்வதற்கு முடிவு செய்வோமேயானால், அவ்வாறு திட்டத்தைக் குறைத்துக் கொண்டு

அதன் விளைவாகக் கிடைக்கும் பணத்தை என்.ஜீ.ஓ-க்களுக்கு சம்பள உயர்வாகக் கொடுக்கலாம். ஆனால் நாம் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கும்போது, திட்டத்தைக் குறைத்துக்கொண்டு என்.ஜீ.ஓ-க்களின் சம்பளத்தை உயர்த்தலாமா என்று யோசிப்பது நல்லது அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். கேரள சர்க்கார் அவர்களுடைய சிப்பந்திகளுக்கு எவ்வாறு சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார்கள் என்று நான் இங்கே சொல்ல விரும்பவில்லை.

SRI S. LAZAR : யூனியன் சர்க்காரிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். யூனியன் சர்க்காரிடமிருந்து சீக்கிரமே தகவல் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது ? மேற்கொண்டு ஏதாவது ரிமைண்டர் அனுப்பி அதோடு இடைக் காலத்தில் இந்த சர்க்கார் ஏதாவது கொடுக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் இதை பதிலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். மத்திய பே கமிஷனின் அறிக்கை வந்த பிற்பாடு தான் இதை பரிசீலிக்கப் போகிறோம்.

SRI M. KALYANASUNDARAM : திட்டத்தில் எவற்றை யாவது குறைத்துக் கொண்டால்தான் சர்க்கார் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த முடியுமென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முக்கிய பொறுப்புடையவர்கள், சர்க்கார் ஊழியர்கள். ஆகவே, அவர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டியது திட்டத்தில் முக்கிய இடம் பெற வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : திட்டத்தில் அதுமாதிரி போடவில்லை. அதை பரிசீலித்த காலத்தில், யாரும் அதற்காக நிதி ஒதுக்க வேண்டுமென்று அப்பொழுது சிபாரசு செய்யவில்லை. திட்டத்தை குறைக்க வேண்டும், இல்லாவிட்டால் புது வரிகள் போட வேண்டும் ; இது தவிர வேறு வழியில்லை.

SRI S. NAGARAJA MONIGAR : சுயராஜ்யம் நமக்கு கிடைத்து விட்டதே, ஆகையால் அதிக சுகமும், அதிக வீடுகளும், அதிக சம்பளமும் கேட்கிறார்களா அல்லது நாம் இன்னும் முன்னேற்றப்பாதை யில்தான் இருந்து கொண்டிருக்கிறோம் என்று நினைத்துத்தான் கேட்கிறார்களா ?

MR. SPEAKER : How can the Hon. Minister answer that question ? It is out of order.

SRI K. ANBAZHAGAN : நாஷனல் டெவலப்மெண்ட் கௌன்ஸிலில் நமது மாநிலத்தின் பிரதிநிதி அவர்களைச் சந்தித்துப் பேசியபோது என்.ஜீ.ஓ-க்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்ற வேண்டுமென்று எந்த முறையில் வற்புறுத்தினார். அவ்வாறு வற்புறுத்திய முறைகள், கொள்கைகள் யாவை என்று இந்த அவைக்கு தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மத்திய சர்க்கார் வேலையில் இருக்கிறவர்களுக்கும் ராஜ்ய சர்க்கார் வேலையில் இருக்கிறவர்களுக்கும் இருக்கக் கூடிய சம்பளத்தில் பாகுபாடு இருக்கக் கூடாதென்று அங்கு வற்புறுத்தப்பட்டது. அதை எந்த முறையில் தீர்ப்பது என்பதுபற்றி சென்ட்ரல் பே கமிஷனின் அறிக்கை வந்த பிற்பாடுதான் திட்டம் வகுக்க முடியும்.

SRI D. S. AUTHIMOOLAM : திருவதாங்கூர் ராஜ்யத்தில் குறைந்தபட்ச சம்பளம் 67 ரூபாய் என்றும், எல்.டி. கிளார்க்கின் குறைந்த பட்ச சம்பளம் 100 ரூபாய் என்றும் நிர்ணயித்திருக்கிறார்கள். அது எந்த

3rd September 1958]

முறையில் சாத்தியப் பட்டது என்று திருவதாங்கூர் ராஜ்ய சர்க்காரிடம் நம் பிரதிநிதி ஒருவரை அனுப்பி அதைப்பற்றி பரிசீலனை செய்ய இந்த சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கு போய் பரிசீலனை செய்யவேண்டிய அவசியமே யில்லை. திட்டச் செலவை அவர்கள் குறைத்துக்கொண்டு அந்தளவிற்கு சம்பளத்தை ஜாஸ்தியாக கொடுத்திருக்கிறார்கள்.

SRI K. RAMACHANDRAN : தாலூக் ஹெட்க்வார்ட்டேர்ஸ் ஸில் வேலை பார்க்கும் என்.ஜி.ஓ-க்களுக்கு ஹௌஸ் ரென்ட் அலவன்ஸ் இருக்கும்போது அதிலும் காப்பிஸ்ட்ஸ், எக்ஸாமினேர்ஸ் போன்றவர்களுக்கு கொடுக்கபடுவதில்லை. அவர்களுக்கும் இந்த அலவன்ஸ் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனி கேள்வி வேண்டும்.

SRI N. K. PALANISAMI : நிதியமைச்சர் அவர்கள், என்.ஜி.ஓ-க்களின் சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்றால் திட்டத்தின் அளவை குறைக்க வேண்டிய நிலை ஏற்படுமென்று சொன்னார்கள். திட்டச் செலவை குறைப்பதற்குப் பதில் அதிகப்படி சம்பளம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாதென்ற முறையில் சம்பளத்தை நிர்ணயித்து அதில் கிடைக்கக் கூடிய பணத்தை கொண்டு அதிகப்படி சம்பளம் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படி கணக்குப் போட்டுப் பார்த்தால் ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு நாலணு கூட அதிகமாக கொடுக்க முடியாது ?

SRI K. VINAYAKAM : Sir, the terms of reference given to the Central Pay Commission are entirely different from the State subjects like the pay structure of N.G.Os. and other employees of our Government. Do the Government believe that the Central Pay Commission will go-into our questions also? Also, what action the Government are going to take soon after their report is made available?

THE HON. SRI C. SUBRAMANIAM : I refer the hon. Member to the terms of reference of the Central Pay Commission.

MR. SPEAKER : Hypothetical questions like, 'whether the Government believe that the Central Pay Commission will go into this question' or 'what action the Government propose to take after their report is available' should not be asked.

SRI K. VINAYAKAM : On a point of personal explanation, Sir. The Hon. Minister has assured us that the Government are likely to take action soon after the report is made available. When he is hypothesizing the issue, I am also at liberty to do so.

MR. SPEAKER : I am sorry the Hon. Minister is not hypothesizing it. The hon. Member is hypothesizing it.

Teachers' Constituency

* 23 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

ஏப்ரல் மாதம் நடந்த சென்னை மேல் சபை தேர்தலில் ஆசிரியர் தொகுதியில் பதிவான ஓட்டுகளில் செல்லாதது எத்தனை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The total number of invalid votes is 266.